பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 3 புதன்கிழமை (17-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 52

## நேற்று உத்தியோகபூர்வமாக வெளியான

# அரசின் தீர்வுத் திட்ட சட்ட வரைவில்

# இணைப்புக் குறித்து எதுவுமில்லை

## பிராந்திய சபைகளைக் கலைக்க ஜனாதிபதிக்கு விசேட அதிகாரம்

கொழும்பு, ஜனவரி 17

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஸ்ரீலங்கா அரசு முன் வைத்துள்ள தீர்வு யோசனைகளின் சட்ட வரைவு நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டது.

ஆனால் வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து அதில் எதுவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதுபற்றி முடிவு செய்யும் பொறுப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் அலகாக அரசினால் இச்சட்ட வரைவில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பிராந்திய சபைகளைக் கலைக்கும் விசேட அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் முற்பகுதியில் ஸ்ரீலங்கா அரசு வெளியிட்ட இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையின் சட்ட வடிவம் வெளியிடப்பட்டிருக்கிறது.

நேற்று வெளியிடப்பட்ட இந்தச் சட்டவரைவு 29 பக்கங்களைக் கொண்டதாக இருந்தது.

அதில் பிராந்திய சபைகளின் எண்ணிக்கை பற்றியோ அல்லது பிராந்திய சபைகளின் எல்லைகள் பற்றியோ

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வாகனம் மீது படையினர் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் கொல்லப்பட்டார்

கொழும்பு, ஜ. 17

கொழும்பில் வாகனம் ஒன்றின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கொழும்பில் இராணுவத்தினர் சோதனை நிலையத்தில் மறித்த போது நிற்காது ஓடிய காரின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

பம்பலப்பிட்டி வஜிரா வீதியில் ஞாயிற்றுக்கிழமை நடந்த இத்தாக்குதலில் சம்சுதீன் என்ற 29 வயது இளைஞன் கொல்லப்பட்டார். 4 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

கார்ச்சாரதி சோதனை நிலையத்தை தாம் காணவில்லை என்று கூறியுள்ளார். (இ-3)

## அத்வானி உட்பட 6 பேருக்கு எதிராக ஊழல் வழக்கு

புதுடில்லி, ஜன. 17

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி உட்பட இந்திய முன்னணி அரசியல்வாதிகள் அறுவருக்கு எதிராக இந்தியப் பொலீஸார் நேற்று ஊழல் வழக்கு தாக்குதல் செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக பணக் கொடுக்கல், வாங்கல் செய்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் உதவிப் பிரதமர் தேவிலால், இந்திரா காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற குழுவின் தலைவர் அர்ஜுன் சிங் மற்றும் பிரதமர் நரசிம்மராவின் நெருங்கிய ஆலோசகரான வீ. சி. சுக்ளா உட்பட மூன்று முன்னணி அமைச்சர்கள் ஏனைய ஐவரும் ஆவர்.

200 இலட்சம் டொலர் சம்பந்தப்பட்ட தொகை குறித்தே விசாரணை நடைபெறுவதாகவும்—

இது இந்திய வரலாற்றிலேயே மாபெரும் ஊழல் வழக்கு என்றும் பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தீர்வுத் திட்ட சட்ட வரைவு; தமிழ்க் கட்சிகள் அதிருப்தி!

## கூட்டணி மட்டும் ஆதரவு

கொழும்பு, ஜன. 17

அரசு வெளியிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தின் சட்ட வரைவு குறித்து தமிழ்க் கட்சிகள் பலவும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் மட்டும் இந்தச் சட்டவரைவை வரவேற்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்ட வரைவில் —

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படாததையும்—

பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதையும்—

தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடபகுதி மக்கள் இடம் பெயர்ந்து வீடு, வாசல்களை இழந்து — உணவு, உடை, உறையுள் இழந்து அந்தரிக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மாகாணசபை தேர்தலுக்கு எதிராக நீதிமன்று இடைக்கால தடை விதிப்பு

## தீர்மானிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றிடம்

கொழும்பு, ஜன. 17

வடமத்திய, சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது.

மேற்படி இரு மாகாண சபைகளையும் கலைத்தமை சட்டரீதியானதா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை உயர் நீதிமன்றத்திடம் கையளித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அதுவரை தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க இடைக்காலத் தடை உத்தரவு விடுத்தது.

மேற்படி இரு மாகாண சபைகளையும் கலைத்தமையை ஆட்சேபித்து சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் சமர்ப்பித்த மனுக்கள் மீதே இந்தத் தடை உத்தரவு விடுக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் டாக்டர் அசோகா குணவர்த்தனா,

(6 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். குடாநாட்டிலும் வன்னியிலும் கிட்டுவுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

சாவகச்சேரி, ஜன. 17

இந்திய வல்லாதிக்கத்தின் சதியால் வீரச்சாவெய்திய கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவு தினம் நேற்று அனுட்டிக்கப்பட்டது.

நேற்று மாலை வல்வெட்டித்துறை உள்ள திருவிலிலும், சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியிலும், கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்திலும் நினைவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கிளிநொச்சியில் கரடிப் போக்குச் சந்தியில் இருந்து பேரணி புறப்பட்டு கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் கூட்டம் நடத்தப்பட்டது.

திருவிலில் நடைபெற்ற கூட்டம் கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த அரவிந்தன் தலைமையில் [illegible] கடற்புலிகளின் தளபதி திரு. கங்கை அமரன் ஈகைச் சுடரையும், யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி திரு. கரிகாலன் தேசியக்கொடியையும் ஏற்றினர்.

பத்து வேங்கைகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லுக்கு வடமராட்சி கோட்ட அரசியல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சட்டவரைவில் உள்ள சில அம்சங்கள்

கொழும்பு, ஜன. 17

அதிகாரப்பரவலாக்கல் சம்பந்தமான அரசாங்கத்தின் யோசனைகள் அடங்கிய சட்ட வரைவு அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸினினால் நேற்று வெளியிடப்பட்டது.

இந்த சட்டவரைவில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ பிராந்திய நிர்வாகங்கள் எந்த ஒரு பிராந்தியத்தின் பிரிவினையை, அல்லது கலைந்துபோவதை ஊக்குவிக்கமுடியாது.

★ பிராந்தியத்தின் எல்லைகளை மாற்றியமைக்கவோ அல்லது புதிய பிராந்தியம் ஒன்றை உருவாக்கவோ முடியாது.

★ சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்தினாலும், பிராந்தியசபைகளினாலும் கருத்துக்கணிப்பினாலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ பிரதமர் அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோரினதும்—

சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களின் ஆலோசனையுடன் செயற்படும் ஆளுநர்களினதும் — பிராந்திய அமைச்சர்கள் சபை உறுப்பினர்களினதும் — ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகிப்பார்.

★ தேசிய பந்தோபஸ்தும் பாதுகாப்பும் தனி விடயமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

★ குடியரசின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும், அச்சுறுத்தும் வகையிலான ஆயுதக் கிளர்ச்சி —

அல்லது பாரதூரமான உள்நாட்டுக் குழப்பங்கள் — ஏற்படும் பட்சத்தில் ஜனாதிபதிக்கு அவசரகால நிலைமை பிரகடனம் செய்யும் அதிகாரம் உண்டு. இத்தகைய சூழ்நிலையில் பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

★ ஒரு பிராந்தியத்தின் முதலமைச்சர் அப்பிராந்தியத்தில் ஒழுங்கைப் பேண தேசிய பொலீஸ் சேவையின் உதவியைக் கோரினால் தேசிய பொலீஸ் ஆணையாளர் அதற்கு தேவையான அதிகாரிகளை கொடுத்து உதவ வேண்டும்.

### துறைமுகங்கள் மத்திய அரசின் கீழ்

★ பாதுகாப்பு, தேசிய பந்தோபஸ்து, தேசிய பொலீஸ், பாதுகாப்பு படைகள், வெளிநாட்டு விவகாரங்கள், அணு சக்தி, விமான நிலையங்கள், துறை முகங்கள், உள்நாட்டு விமான போக்குவரத்து ஆகியன மத்திய அரசாங்கத்தின் கீழ் செயற்படும்.

★ இதே வேளை சுகாதாரம், கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம் கடற்றொழில் போன்றவை பிராந்திய சபைகளின் கீழ் வரும்.

★ இலங்கை ஐக்கியமும், இறைமையும் கொண்ட குடியரசாக விளங்கும்.

★ இலங்கை குடியரசு பிரிக்கப்படமுடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்கும்.

★ இந்த ஒன்றியத்தில் இருந்து எந்தவொரு பிராந்தியமும் பிரிந்து போகமுடியாது என்பதே முக்கியமான அம்சமாகும்.

★ பௌத்த மதத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டாலும். எல்லா மதங்களுக்கும் உள்ள உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும்.

★ கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர, கோட்டே ஆகியன மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும்.

### ஜனாதிபதியே ஆளுநரை நியமிப்பார்

★ பிராந்தியத்தின் முதலமைச்சரின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி ஆளுநரை நியமிக்க வேண்டும்.

★ ஆளுநரை அகற்றுவதற்காக சபை உறுப்பினர்களில் சமுகமளிக்காதவர்கள் உட்பட மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதவர்களினால் ஆளுநரை அகற்றுமாறு ஜனாதிபதிக்கு பிராந்திய சபை ஆலோசனைகளைக் கூறலாம்.

★ அரசமைப்பு ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறுவது, தமது பதவிக்குரிய தத்துவத்தை துஷ்பிரயோகம் செய்வது, துர்நடத்தைக்கு அல்லது ஊழலுக்கு குற்றவாளியாக இருப்பது, லஞ்சத்துக்கு அல்லது ஒழுக்கக் கேட்டுக்கு குற்றவாளியாக இருப்பது போன்றவற்றுக்காக ஆளுநரை நீக்கி விடுமாறு பிராந்தியசபை கோர முடியும்.

★ பிராந்திய சபையை கலைக்க அதிகாரம் ஆளுநருக்கு இருக்கும்.

★ ஒரு பிராந்தியத்தின் பரப்பளவு, சனத்தொகை ஆகியவற்றின் அடிப்படையில் அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அமையும்.

★ பிராந்தியசபை பதவிக்காலத்துக்கு முன்னமே கலைக்கப்பட்டால் ஒழிய அதன் முதலாவது கூட்டத்துக்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 5 ஆண்டு காலப் பகுதிக்கு அது தொடர்ந்து இயங்கும்.

★ 5 ஆண்டு காலம் முடிவடைந்ததும் இயல்பாகவே சபை கலைந்ததாகக் கொள்ளப்படும்.

★ ஒரு பிராந்தியத்துக்கு முதலமைச்சர் தலைவராக இருப்பார்.

★ 6 பேருக்கு மேற்படாத வேறு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையும் இருக்கும்.

★ முதலமைச்சரின் ஆலோசனையின் மீது, பிராந்திய சபையின் உறுப்பினர்களில் இருந்து ஆளுநர் ஏனைய அமைச்சர்களை நியமிப்பார்.

★ ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஓர் மேல் நீதிமன்றம் இருக்கும். அந்த நீதிமன்றம் பிராந்தியத்துக்குள் புரியப்படும் தவறுகள் போன்றவற்றை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்று இருக்கும்.

★ பிராந்தியத்தில் உள்ள நீதிவான் நீதிமன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகியவற்றினால் விதிக்கப்பட்ட தீர்ப்புக்கள், தண்டனைகள், கட்டளைகள் என்பன பற்றி மேன் முறையீடு செய்யும் அதிகாரம் இதற்கு இருக்கும்.

### நீதிச்சேவை ஆணைக்குழு

★ ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய நீதிச் சேவை ஆணைக்குழு அமைக்கப்படும். பிரதான அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய அரசமைப்பு பேரவையினால் அமைக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகள் அல்லது தற்போது பதவி வகிக்கும் நீதிபதிகள் இதில் அங்கம் வகிப்பர். அரச பதவி வகிக்கும் நீதிபதி இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும்போது தமது நீதித்துறை பதவியை கைவிடவேண்டும்.

★ ஒவ்வொரு பிராந்தியத்தினதும் ஆளுநர், பிராந்தியத்தின் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு தகமை உள்ள ஒருவரை பிராந்திய சட்டத்துறை தலைமை அதிபதியாக நியமிக்கவேண்டும்.

★ பிராந்திய மட்டத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருக்கும். ஆளுநருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் அரசமைப்பு பேரவையினால் நியமிக்கப்படும் ஐவருக்கு குறையாத அங்கத்தவர்களை இது கொண்டிருக்கும்.

★ ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள பிராந்திய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுங்காற்று நடவடிக்கை ஆகியவை பிராந்திய சேவைக்கு உட்பட்டதாக இருக்கும்.

★ ஒரு பிராந்தியத்தில் உள்ள அரசாங்க காணிகள் பிராந்தியத்துக்கு உரியதாக்கப்படும்.

★ காணி பங்கிடும்போது, முதலில் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கும், பின்னர் அந்த பிராந்தியத்தை சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

★ பிராந்தியங்களுக்கு இடையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களில் அடக்குவதாக இருப்பதால், அவை மத்திய அரசின் பொறுப்பில் இருக்கும்.

### பொலீஸ் ஆணைக்குழு

★ பிராந்திய பொலீஸ் ஆணையாளரின் தலைமையில் பிராந்திய பொலீஸ் சேவை இருக்கும். ஆளுநருடன் கலந்தாலோசித்த பின்னர் பிராந்தியத்தின் முதலமைச்சர் இதனை நியமிக்க வேண்டும்.

★ இது தவிர பிராந்திய பொலீஸ் ஆணையாளரையும், மற்றும் இருவரையும் கொண்டுள்ள பிராந்திய பொலீஸ் ஆணைக்குழுவும் இருக்கும். (இ-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் இதுவரை பட்டச் சான்றிதழைப் பெறாதவிடத்துத் தங்களது பல்கலைக் கழக அடையாள அட்டையைக் காண்பித்துத் தங்களது பட்டச் சான்றிதழ்களைச் சாவகச்சேரியில் அமைந்துள்ள உப அலுவலகத்தில் 1996. 01 24. ஆம் திகதி (புதன்கிழமை) வரை பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1996. 01. 16

(சி/3157)

## கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி கோட்ட அலுவலகத்தில் நடைபெற விருப்பதாகவும் —

அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் — கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி கிளை

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க கட்டடத்தில் இயங்கிவரும் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை நாளை முதல் சாவகச்சேரி நவீன சந்தை கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கும்.

# கிழக்கு ராணுவ நடவடிக்கைக்கு நாட்டு மக்களின் ஆதரவு இராது

## பாதுகாப்புச் செய்தியாளர் கருத்து

கொழும்பு, ஜன. 16

''கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையை அரசுப் படைகள் ஆரம்பித்தாலும் அதற்கு நாட்டு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பது தெளிவாக தென்படவில்லை.''

''சண்டே ரைம்ஸ்'' பாதுகாப்பு செய்தியாளர் இக்பால் அத்தாஸ் பி. பி. ஸி சிங்கள சேவைக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வடக்கில் இருந்து அதிரடிப் படையினர் கிழக்கே நகர்த்தப்படுவதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கில் புலிகள் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேற்றுவதும் —

அவர்களின் முகாம்களை அழிப்பதுவுமே — படையினரின் திட்டம் என்று கூறப்படுகிறது.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமத்தில் ஒரு பகுதியை படையினர் கைப்பற்றினர்.

வலிகாமத்தில் இருந்து படையினரில் ஒரு பகுதியினர் வெளியேறினாலும் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று படையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கையில் படையினரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வாடகைக்கு பெறப்பட்ட ரஷ்ய விமானத்தையும் அதன் விமானிகளையும் தொடர்ந்து பயன்படுத்துவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

புதிய விமானத்தை கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்படுவதால் அந்த விமானத்தை ஆரம்பிக்கவிருக்கும் ராணுவ நடவடிக்கைக்கும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது — என்றார்.

(இ-3-6)

# தற்போதைய சூழ்நிலைகாரணமாக பல நாடுகள் உதவி வழங்க தயக்கம்

## கெயர் அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜன. 16

வடக்கு – கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் விவசாயத் திட்டங்களை மேற்கொள்ள அமெரிக்கா உட்பட பல நாடுகள் நிதி வழங்க தயாராகவிருக்கின்றன. எனினும் தற்போதைய சூழ்நிலை காரணமாக அத்திட்டங்களை ஆரம்பிப்பது பற்றி யோசிக்க வேண்டியுள்ளது.

கெயர் இன்ரர் நஷனல் அமைப்பின் யாழ். அலுவலக அதிகாரியாக நியமனம் பெற்றுள்ள ஹட்ரி அற்சில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது இங்கு நிலவும் தளம்பல் நிலை காரணமாக இவ்வருடத்துக்கான திட்டங்களை செயற்படுத்துவது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் என்றும் அவர் கூறினார். (இ-3)


## றாஜு ஸ்ரோர்ஸ்

(யாழ்ப்பாணம்)

தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

நெல் அவிக்கும் பொயிலரும் அத்துடன் அடுப்பும் புத்தம் புதியது, பாவிக்காதது (6 அடி, 4 அடி) 18 மூடை அவிப்பது, மா அரைக்கும் கிறைண்டர்கள அத்துடன் நெல்குற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

(39968)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின்
ஓய்வு பெற்ற ஆசிரியர்

**மரியாம்பிள்ளை இம்மானுவல்**

அவர்கள் 16 – 01 - 1996 இல் மறைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் சங்கம்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

40191)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வுத்திட்டத்தை எதிர்த்து கண்டியில் பிக்குகள் சத்தியாக்கிரகம்

## வெள்ளியன்று நடக்கும்

கொழும்பு, ஜன. 17

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பித்துள்ள அரசியல் யோசனைகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாளை மறுதினம் கண்டியில் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக ஒன்பது பலம் வாய்ந்த பிக்குகள் சங்கங்கள் கூட்டாக அறிவித்திருக்கின்றன.

தீர்வு யோசனைகளுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், எதிர்ப்புப் பேரணி, ஆட்சேபக் கூட்டம் ஆகியவையும் அன்றைய தினம் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளும், தலதா மாளிகையின் தியவதன நிலமேயும் பங்குபற்றுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

''தீர்வுத் திட்டத்தை பெரும்பான்மைச் சிங்கள மக்கள் எதிர்க்கின்றனர். அரசு சமர்ப்பித்துள்ள திட்டம் நாட்டைப் பிளவுபடுத்தவே வழிவகுக்கும்''— என்று சத்தியாக்கிரக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.

(உ)

### நீரிழிவுக்கு 9 வயது சிறுவன் பலி

கிளிநொச்சியில் நீரிழிவு நோய்க்கு 9 வயது சிறுவன் ஒருவர் பலியான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பென்ரிக் கோஸ்ட் லேனில் இருந்து அண்மையில் இடம்பெயர்ந்து மாங்குளம் கறுப்பட்டை முறிப்பில் வசித்து வந்த செல்வசேகரன் கிறிங்சிகேசன் என்ற சிறுவனே இறந்தவர் ஆவார். (இ-76)

வன்னியில்

## 2 வாரங்களில் 75 பேர் போராட்டத்தில் இணைவு

கிளிநொச்சி, ஜன. 17

வன்னி மாவட்டத்தில் மண் மீட்புப் போரில் இணைவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களில் 75 பேர் புதிதாக இணைந்துள்ளனர் எனவும்— இவற்றுள் மருத்துவ பீட மாணவர் ஆசிரியர்கள் போன்ற பல்வேறு தரப்பட்டவர்களும் அடங்குவர் எனவும்— வன்னி மாவட்ட புதிய போரளிகள் முகாம் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(இ-76)

ஷெல் தாக்குதலில்

## கழுவன்கேணியில் 10 வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக கழுவன்கேணி கிராமத்தில் சிநோர் வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள சுமார் 10 வீடுகள் சேதமாகியுள்ளன

மின்சாரக் கம்பிகளும் அறுந்து வீழ்ந்தன.

இதுகுறித்து இராணுவ இணைப்பதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ-3)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

17 – 01 – 1996

இரவு

★ 8-02 — தாயகப்பாடல்
★ 8-05 — நாடகம் நா. யோகேந்திரநாதன் எழுதிய ''மண்தின்னி''
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

18 – 01 – 1996

காலை

★ 7. 02 — மாவீரவணக்கம்
★ 7-10 — மணியாரம்
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
தொடர்ந்து 8. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

## அம்பாறை மாவட்டத்தினுள் புலிகள் மேலும் ஊடுருவல்

### மின்மாற்றிகள் தகர்ப்பு

அம்பாறை மாவட்டத்துக்குள் இவ்வாரம் புலிகள் மேலும் ஊடுருவி இருப்பதாக சண்டே ரைம்ஸ் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கில் அடுத்த மூன்று வார காலத்துக்குள் பெரும் பலப்பரீட்சை ஒன்றுக்கு ஸ்ரீலங்காப் படையினரும் விடுதலைப் புலிகளும் தயாராகி வருகின்றனர்.

படையணிகளை கிழக்கே அனுப்பும் நடவடிக்கைகள் இவ்வாரம் அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

படையினரின் தாக்குதல் திட்டங்களைக் குழப்பியடிக்கும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் கிழக்கில் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கிழக்கில் மின்மாற்றிகள் சேதமாக்கப்பட்டதால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 30 கிராமங்கள் வரை இருளில் மூழ்கி உள்ளன.

விடுதலைப் புலிகள் ஊடுருவிய பகுதிகளில் இதுவரை பத்துக்கு மேற்பட்ட ரேலோ உறுப்பினர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## மலையக இளைஞர்களையும் அரசு ஆயுதம் ஏந்த வைக்கப் போகிறது!

### இ. தொ. காங்கிரஸ் எம். பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 17

மலையக இளைஞர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுகிறார்கள். கைது, சித்திரவதை மூலம் மலையக இளைஞர்களையும் நீங்கள் ஆயுதம் ஏந்தச் செய்யப்போகிறீர்கள்.

இப்படிக் கூறினார் கண்டி மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம். பி. எஸ். இராஜரட்ணம்.

அவசர கால நீடிப்பு விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்தபோது பேசுகையில் அவர் ப்படிக் கூறினார்.

இந்த அரசைப் பதவியில் அமர்த்துவதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் வட பகுதி மக்கள். ஆனால் வடக்கில் இருந்து எவரும் தற்போது கொழும்புக்கு வரமுடியாதுள்ளது.

யாழ்ப்பாணமும் இந்த நாட்டின் ஒருபகுதி என்கிறீர்கள். அப்படி என்றால் ஏன் அந்த மக்கள் கொழும்புக்கு வருவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன?

இப்படி அவர் கேட்டார்.

(இ-3)

## யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது என்பது நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது

### இந்தியா புறப்படு முன் தொண்டா பேட்டி

கொழும்பு ஜன. 17

தற்போதைய யுத்தம் தமிழருக்கு எதிரான யுத்தமே. இது தமிழர்களுக்கு எதிரான யுத்தம் என்பதை இடம்பெயர்ந்த மக்கள் காட்டி உள்ளனர்.

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் இந்தியா புறப்பட முன்னர் சண்டே ரைம்ஸ் வார இதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி: ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கை வெற்றியில் முடிந்துள்ளது. ஆனால் ஆயிரக் கணக்கான அகதிகள் முகாம்களில் வசிக்கின்றார்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

தொண்டா: யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று நிரூபிக்க அரசு எவ்வளவு முயல்கின்றதோ அவ்வளவு தெளிவாக அது தமிழர்களுக்கு எதிரானதே என்பதை இடம்பெயர்ந்த மக்கள் காட்டியிருக்கின்றார்கள். யுத்தம் புலிகளுக்கோ அல்லது பயங்கரவாதத்துக்கோ எதிரானது மட்டுமல்ல, எல்லோருக்கும் எதிரானது என்பதை மக்கள் நிரூபித்துள்ளார்கள்.

கேள்வி: இந்த விடயத்தை விடுதலைப் புலிகள் நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள் என நீங்கள் கருதுகின்றீர்களா?

தொண்டா: இடம்பெயர்ந்த மக்களை முற்றாக புலிகள் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

கேள்வி: சென்னை புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் நீங்கள் என்ன பேசினீர்கள்?

தொண்டா: பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று செய்துள்ள உதவிகளையும் இருதரப்பு உறவுகளையும் மதிப்பீடு செய்யும் சந்திப்பு அது. உறவு ஒரு தலைப்பட்சமானதாக இருக்கக் கூடாது.

கேள்வி: வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலைப் பற்றிப் பேசினீர்களா? உங்கள் திட்டம் என்ன?

தொண்டா:- மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் வராத நிலையில் இது பற்றி இப்போதைக்கு கருத்துக் கூறுவது பொருத்தமற்றது.

கேள்வி:- இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்கப்படும் விதம் குறித்து நீங்கள் திருப்திப்படுகிறீர்களா?

தொண்டா:- உணவு வழங்குவது என்பது கேள்வியல்ல அவர்களின் இன்னல்கள் ஓர் இலட்சியத்துக்காக அவர்கள் [illegible] தான் கேள்வி.

(உ)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க் குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துற்கு நாளை 18 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

★ பாக்கியம் ஐயம்பிள்ளை அல்லது தேவகி கிருபாகரன் – 56. கலைமகள் வீதி, அரியாலை மேற்கு.

★ திருமதி தவசி பாலு (அன்னம்) — 4 ம் வட்டாரம், சங்கானை, நிற்சாமம்.

★ செல்வி தம்பையா பரஞ்சோதி — இணுவில் தெற்கு, இணுவில்.

★ மனோன்மணி சதாசிவம் — குப்பிளான் சந்திக்கருகாமை, குப்பிளான்.

★ அன்னம்மா சதாசிவம் — மே. பா. மனோகரி ஜெயபாலன், அன்னை இல்லம், சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

★ சிவசம்பு இராஜலிங்கம் — புகையிரத ஒழுங்கை, சூராவத்தை, சுன்னாகம்.

★ வ. திரவியம் — வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

★ பரமேஸ்வரி கந்தையா — வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

★ கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை — 451, பிரதான வீதி, கொழும்புத்துறை.

★ விமலாதேவி சின்னத்துரை — விமலா படப்பிடிப்பு நிலையம், காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ யு. து. இந்திரா அந்தோணிப்பிள்ளை—32/10, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

★ நனிப்பிள்ளை சிவசம்பு — கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

★ பாலசுந்தரம் ரவி அல்லது சாந்தகுமார் — தேவி பவனம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

★ நடராசா சிறிபாலன் — அரசடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ புவனேஸ்வரி தர்மலிங்கம் — 26/1, 3 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ நாகர் நல்லையா — முருகமூர்த்தி வீதி, (கோவில் வீதி), நவாலி தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

★ இராசமலர் சத்தியநாதன் — மே/பா. இராசம்மா அப்பையா, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

★ திருமதி விஜயலட்சுமி சிவதாசன் — சத்தியகிரி, இணுவில் கிழக்கு.

★ முத்துத்தம்பி சபாரட்ணம் (மனோன்மணி)— நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ இராசமணி சண்முகராசா — சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ மேரி ஜோசப்பின் சின்னப்பு — சாவகச்சேரி பிள்ளையார் கோவிலடி,

★ வேலாயுதம் செல்வராசா — கண்டி வீதி, சாவகச்சேரி. (பழைய முகவரி:- 29, கச்சேரி ஒழுங்கை, யாழ்.)

★ வேலுப்பிள்ளை ஜெயராசா — 183/ 01, மீசாலை வடக்கு, கொடிகாமம்.

★ திருமதி பூரணி தியாகராசா (முத்தம்மா) — நுணாவில், சாவகச்சேரி.

★ முருகன் இந்திரசேகரம் — மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் கண்டி றோட்டில் 5¼ பரப்பு காணியும், நீர் இறைக்கும் இயந்திரம் (Mark 12), சோலர், Emergency Light ஆகியனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. அன்னலக்சுமி, நுணுவில் பிள்ளையார் கோவிலடி, சரசாலை வடக்கு, சரசாலை (40165)

## PALM READING

Want to Know What is in Store for you as Revealed by Your Palm? Consult Kangatharam, Sarasalai North. (40170)

## தேவை

குரக்கன் தேவை. இருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அண்ணா கோப்பி, ஐயாகடை, மீசாலை. (சி-3050)

15 கிலோ மேசைத்தராசும், 15 கிலோ தோரணதராசும் படிகளுடன், 5கிலோ தோரணதராசும் படிகளுடன் தேவை. வைத்திருப்பவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். ஊர்காவற்துறை ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயம், நவீனசந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (சி-2917)

# அரசியல் தீர்வைக் கண்டறிவதில் அரசுக்குப் போதிய அக்கறை இல்லை

## புலிகள் குற்றம் சாட்டுவதாக வெரித்தாஸ் தெரிவிப்பு

மணிலா, ஜன. 17

இலங்கையில் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்து நீடிக்கும் இனவாதப் போரை ஒரு முடிவுக்கு கொண்டு வரு முகமாகஅரசியல்தீர்வுகளைக் கண்டறிவதில் ஸ்ரீலங்கா அரசு போதிய ஆர்வம் காட்டுவதில்லை இப்படி விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி இருப்பதாக வெரித்தாஸ் வனொலி தெரிவித்தது.

தமிழீன மக்கள் உரிமைக்காகவும் அமைதிக்காகவும் குரலெழுப்பும் வேளையில் மக்களை ஒடுக்கும் முகமாக அரசு இராணுவத் தளபாடங்களைச் சேர்க்கும் முயற்சியில் மட்டுமே ஆர்வம் காட்டுகிறது.

உயர்ரக போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், ஆயுதப்படகுகள், கனரக பீரங்கிகள் ஆகியவற்றை வாங்கிக் குவிப்பதிலும் —

இராணுவ வளத்தைப் பெருக்குவதிலும் — மட்டுமே அரசு ஆர்வம் காட்டுகிறது.

தமிழீழ மக்களின் உரிமைக் குரல்களைக் கண்டு கொண்டதாகந் தெரிவில்லை. அரசியல் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதாகக் கூறிய அரசு தற்போது மாறுபட்ட தந்திரமான நடவடிக்கைகளைக் கையாள்வதாகவே தெரிகிறது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்க வட்டாரங்கள் கருதுவதாக ''ராய்டர்'' செய்தியாளரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-7)

# இலங்கை வங்கி பதில் பிராந்திய முகாமையாளர்

சாவகச்சேரி, ஜன 17

இலங்கை வங்கியின் பதில் பிராந்திய முகாமையாளராக திரு கே. பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பிராந்திய முகாமையாளராகப் பணியாற்றிய திரு. எஸ். சண்முகசுந்தரம் எதிர்வரும் 23ஆம் திகதி ஓய்வுபெறுவதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

# அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான ஆசிரியர்கள்

## நிவாரணம் கேட்கின்றனர்

கல்விச் சேவையில் அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்ட சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களும், அதிசாரிகளும் தமக்குரிய நிவாரணத்தை வழங்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்விச்சேவை அதிகாரிகளை உள்ளடக்கிய சங்கமே இந்த கோரிக்கையை விடுத்துள்ளது. (இ-3)


## இடமாற்றம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிய
கிறீன் சியஸ் ரெயிலறிங்
(குமார் தையல் அகம்)

தற்பொழுது கிளிநொச்சியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்பு:
**கிறீன் சியஸ் ரெயிலறிங்**
கிளிநொச்சி புகையிரத வீதி,
கிளிநொச்சி. (39967)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



காரைநகர் - வாரிவளவு
**உயர்திரு. இ.ச. பேரம்பலம் (E.S.P.)**
அவர்கள்

தோற்றம்: **26 – 04 – 1926** மறைவு: **19 – 01 – 1993**

அன்பால் யாவரையும் அரவணைத்து
கல்வியால் எம்மை வழிகாட்டி
உழைப்பால் உயர்ந்த எம் தந்தையே!
சென்ற இடமெல்லாம் பண்பால் உயர்ந்து
நின்றோம்
ஆனால் இன்று இங்கு நீர் இல்லை
நீராண்ட செல்வம் நிறைந்த கல்வியாகும்.
நின் சேவை பெற்றோர் பலர். நின்
பேராண்ட குடும்பம் பெயர் சொல்ல
நின் வழி புகழ் சேர்ப்போம்.
பாராண்ட மன்னர் புகழ் இருந்தாலும்
பண்பில் எளிமையானீர்.
மூவாண்டு சென்றாலும் இன்முகம் மறவோம்
எம்முடன் நீர் இருப்பீர்.
மாறாது உன் நினைவு, ஆறாது எம் துயரம்.

இ.ச. பேரம்பலம் குடும்பத்தினர்
[illegible]

வாரிவளவு,
காரைநகர். (40168)

# 3 வாரங்களுக்கு முன்னரும்
# ஏவுகணைகளை புலிகள் வாங்கி உள்ளனராம்

கொழும்பு, ஜன. 17

வெளிநாட்டு கெரில்லா அமைப்பு ஒன்றிடமிருந்து ஒரு தொகை ஏவுகணைகளை கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என ''தசண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொள்வனவுக்கு சிங்கப்பூரை இடமாகக் கொண்டு இயங்கும் ஆயுத வர்த்தகர் ஒருவர் தரகராகச் செயற்பட்டுள்ளார்.

இந்தக் கொள்வனவு நடவடிக்கை பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ''இன்டர்போல்'' (சர்வதேச பொலீஸ்) அமைப்பின் உதவியை நாடுவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது.

இராணுவ புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

சர்வதேச ஆயுத வர்த்தகர்கள் மற்றும் கடத்தல்காரர்களுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ)

# சூதாட்டம் கத்தி வெட்டில் முடிவு

மந்திகை, ஜன. 17

சூதாட்டத்தின்போது ஏற்பட்ட தகராறு கத்திவெட்டில் முடிவடைந்தது.

இச்சம்பவத்தின்போது இருவர் படுகாயமடைந்தனர்.

கற்கோவளத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது அடிபட்ட இருவரில் சுப்பிரமணியம் நந்தன் (வயது 30) என்பவர் கத்திவெட்டுக்கிலக்கானார். தங்கவேல் சூரியமூர்த்தி (வயது 39) என்பவர் போத்திலால் குத்தப்பட்டுப் படுகாயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-173-15)

# காய்ச்சலால் மரணம்

மந்திகை, ஜன. 17

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் திங்களன்று அங்கு மரணமானார்.

கோப்பாயில் இருந்து இடம் பெயர்ந்து கைதடியில் வசித்து வந்த சுப்பிரமணியம் சிவபுகுந்தலிங்கம் (வய 35) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-15)

## தேடுகின்றார்

**பதஞ்சலம் தியாகராசா** என்பவரை அவரது மகன் **கிருபாகரன்** தேடுகின்றார். எங்கிருந்தாலும் உடன் வந்து சந்திக்கவும்.

தி. கிருபாகரன்
C/o சுப்பிரமணியம்
பாடசாலை ஒழுங்கை,
கெருடாவில்,
சாவகச்சேரி. (40189)

## அறிவித்தல்

இன்றைய யுத்தசூழ்நிலை காரணமாக இல: 70C, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**புனிதவதி அன் சன்ஸ்,**

நகை அடகு கடை 1995 ஐப்பசி மாதம்தொடக்கம் இயங்காமை யாவரும் அறிந்ததே. அடகு வைத்தவர்கள் தயவுசெய்து **நாகர் கோயில் வீதியில் உள்ள எழுதுமட்டுவாள் தெற்கு** கிராம உத்தியோகத்தர் வீட்டுக்கு முன் வீட்டில் வந்து மீட்கவும்.

(40187) பொ. குணசிங்கம்

## உடன் தொடர்பு கொள்ளவும்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த **சச்சிதானந்தன் விக்னேஸ்வரன்** உடன் தொடர்பு கொள்ளவும்.

**காசித்தம்பி கயிலாயபிள்ளை,**
1 ஆம் கட்டை ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி. (40188)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: **12–09–1921** மறைவு: **17–01–1978**

**A.K. ஆறுமுகம்தம்பி**
(புகையிரத அத்தியட்சகர் C. G. R. மருதானை)

ஆண்டுகள் ஆயிரம் கழிந்தாலும்
நினைவுகள் என்றும் இன்றும் நீங்காத

மனைவி கமலா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (40186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திரவப்பணம்

வடபகுதியில் உள்ள வங்கிகளுக்குக் கொழும்பில் இருந்து திரவப் பணம் அனுப்புவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீங்கும் அறிகுறி இல்லை.

அதனைத் தற்காலிகமாக வேனும் தளர்த்தி இப்பகுதி மக்களின் பணப் புழக்கக் கஷ்டத்தை நீக்கும் சிந்தனையை சிறிதள வேனும் அரசிடம் காண முடியவில்லை.

இது விடயத்தில், இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் மேற்கொண்ட முயற்சியும் தோல்வி கண்டு விட்டது.

கொழும்பு அரசாங்க இயந்திரத்தைப் பொறுத்தளவில், வடக்கு — கிழக்கு விவகாரங்களில் சிவில் நிர்வாகப் பிரிவுகள் — திணைக்களங்கள் — எல்லாவற்றையும்விட, பாதுகாப்பு அமைச்சுக்கே — இராணுவ அதிகாரிகளுக்கே — மேலதிகாரமும், மேலாணைத் தகுதியும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையை மீறி வேறு எந்த அமைச்சு அல்லது திணைக்கள அதிகாரி எவரும் செயற்பட முடியாது. தமது பிரிவுக்குட்பட்ட அல்லது அதிகாரத்துக்கு உட்பட்டது என்று தட்டிக் கேட்கவும் முடியாது. பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் — ஆயுதப்படை அதிகாரிகள் — போடுவது தான் சட்டம்; எவரும் மீறிச் செயற்பட முடியாது என்று ஆகிவிட்டது.

திரவப் பணம் இல்லாமல் காசுச் சுற்றோட்டம் மங்கிப் போய்விடும்; மக்களின் நாளாந்த காசுப் புழக்கம் தேய்ந்து போய்விடும்; தொழில் துறைகள் நலிந்து, நசிந்து போகும் நிலை உருவாகும் என்பது பாதுகாப்பு அமைச்சுக்கோ, அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கோ தெரியாதவை அல்ல.

தமிழர்களைச் சகல வழிகளாலும் கஷ்டமுறச் செய்து அவர்களின் விடுதலை உணர்வையும், போராட்டத்தையும் மழுங்கடித்தும், பலவீனப்படுத்தியும் விடவேண்டும் என்பதற்காகவே இத்தகைய அழுத்தங்களை, நெருக்குதல்களை அரசு போடுகிறது.

அரசாங்க வங்கிகளை நம்பி, அவற்றில் பணத்தைச் சேமிப்பிலிட்ட வடபகுதி மக்களுக்கு அவர்களது பணம் இப்போதைய நெருக்கடியான கட்டத்தில் அவசரத்துக்கு உதவவில்லை.

திரவப் பணம் இல்லாமையால் காசுச் சுற்றோட்டம் நலிவுற்று வர்த்தகம் மற்றும் தொழில்துறைகள் பாதிப்படைந்துள்ளன. மக்களின் நாளாந்த வாழ்க்கையும் ஊசலாடும் நிலைக்கு வந்துள்ளது.

நித்திரை செய்பவனை எழுப்புவது சுலபம்; நித்திரை செய்வதாகப் பாசங்கு செய்பவனை எழுப்புவது எப்படி?

வடபகுதி மக்களை தனது பிரசைகள் என்று உரிமை கொண்டாடிக் கொண்டே அரசு தமிழர்களுக்கு இவ்வித நெருக்குதல்களைக் கொடுக்கிறது.

பணச் சுழற்சிக்குத் தேவையான திரவப் பணத்தை அனுப்பாது மக்களை கஷ்டமுறச்செய்வதும் ஒருவகையில் அடிப்படை உரிமை மீறவே ஆகும்; வாழ்வுரிமையை மறுப்பதாகும்.

இது குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஸ்ரீலங்கா அரசைத் தட்டிக் கேட்கக்கூடாதா?

இந்நிலை நீடிப்பின் வடபகுதி மக்கள் காசுப் புழக்கத்துக்கு மாற்று வழி எதனை யாவது நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

# ஆஸ்திரேலிய மத்தியஸ்தத்துடன் சமாதானம் ஏற்படுத்த முயற்சி?

கொழும்பு, ஜன. 17

ஆஸ்திரேலியாவின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ''லக்பிம சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்போன் நகரத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் சமூகசேவை அமைப்பு ஒன்று இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் —

''டெரா''என அழைக்கப்படும் இந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் ஸ்ரீலங்கா வந்திருப்பதாகவும் 'லக்பிம' மேலும் தெரிவிக்கிறது.

இந்தப் பிரதிநிதி கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகள், தமிழ் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும் வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அரசியல் தீர்வைக் காண்பது வெளிநாட்டு மத்தியஸ்தரை எவ்வாறு பயன்படுத்

### சிங்கள வார இதழ்செய்தி

துவது என்ற விடயங்களே தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போது ஆராயப்படுகின்றனவாம்.

அதே சமயம் மேற்கு நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் தமிழர்களின் பிரதிநிதிகளும் மெல்போன் நகர தமிழ் அமைப்பின் பிரதிநிதிகளும் மேற்கு நாடு ஒன்றில் வைத்து இந்திய அரசின் பிரதிநிதி ஒருவருடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் பேச்சு நடத்தி உள்ளனர் என்றும்—

இந்தியாவின் உடன்பாடு கிடைத்தால் மட்டுமே தான் மத்தியஸ்தம் வகிக்க சம்மதம் என்று ஆஸ்திரேலியா தெரிவித்திருப்பதாகவும்—

தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் தன்னால் மத்தியஸ்தம் வகிக்க முடியாது என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்துவிட்டதாகவும் 'லக்பிம' மேலும் தெரிவிக்கிறது. (இ-10)

## மனித உரிமை ஆணைக்குழு பொலிஸ் மீது குற்றச்சாட்டு

ஆட்கள் கைது செய்யப்படும் பொழுதும் தடுத்து வைக்கப்படும் பொழுதும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் அனைத்தும் பொலிசாரால் மீறப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளதாக ''லக்பிம'' வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டால் அதுபற்றி 24 மணித்தியாலங்களுக்குள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.

ஆனால் பொலிசாரால் இது உரிய முறையில் பின்பற்றப்படுவதில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் சந்தேகத்தின் பேரில்தான் கைது செய்யப்படுகிறார்கள்.

எவ்வாறாயினும் ஒருவர் கைது செய்யப்படின் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை எமக்கு அறிவிக்கவேண்டும். ஆனாலும் இதுவரை எந்தப் பொலிசாரும் தாம் மேற்கொண்ட கைதுகள் பற்றிய விவரங்களை அறிவிக்கவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

(இ-10)

## வயிற்றோட்டம் இளைஞன் மரணம்

மந்திகை, ஜன. 17

வயிற்றோட்டம் காரணமாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒருவர் திங்களன்று மரணமானார்.

வல்வெட்டியைச் சேர்ந்த சரவணைக்குட்டி யோகநாதன் (வயது24) என்ற இளைஞனே மரணமானவராவார்.

இதேவேளை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வயிற்றோட்ட நோய் காரணமாக தினமும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

திங்களன்று கிளிநொச்சியில் 5 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த நடராசா உதயகுமார் (வயது18) என்ற இளைஞனே வயிற்றோட்டம் காரணமாக கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (இ-173-15)

## சுவிஸ் தூதரக ராஜதந்திரி – மனைவி புலிகளுக்கு ஆதரவானவர்களாம்

கொழும்பு, ஜன. 17

சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றும் ஒரு ராஜதந்திரியும், அவரது மனைவியும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் போது அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதில் இலங்கையும், சுவிட்சர்லாந்தும் இணக்கம் கண்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சுவிட்சர்வாந்து வெளிவிவகார அமைச்சர் பிளாவி கொட்டியும் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இது தொடர்பான இணக்கம் காணப்பட்டது.

ஆனால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு அவசர சான்றிதழ் வழங்காமல் சகல நாடுகளுக்கும் செல்லக் கூடிய கடவுச்சீட்டு வழங்கப்படுவதாக ஜெனிவாவில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் கொழும்புக்கு கடிதம் எழுதி உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப ராஜதந்திரியின் மனைவி ஜெனிவாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் உபசரிப்பாளராகக் கடமையாற்றுகிறார் என்றும்—

இதற்கான முன் அனுமதி இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் இருந்து பெறப்படவில்லை என்றும் —

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இவர் ஆதரவு வழங்கிறார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சந்திரசேகரனை சேர்க்க இ. தொ. காவில் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 17

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் பிரதி அமைச்சர் சந்திரசேகரனையும், அவரது மலையக மக்கள் முன்னணியையும் இணைக்கும் அமைச்சர் தொண்டமானின் முயற்சிக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இ.தொ. காங்கிரஸின் உயர் பதவிகளில் இருக்கும் பலரும் அமைச்சர் தொண்டமானின் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பிரதி அமைச்சர் சந்திரசேகரனுக்கு இ.தொ.காவின் செயலாளர் பதவியை வழங்கி அவரது ம.ம. முன்னணியை இ.தொ.காவில் இணைத்து விடுவதால்—

இ. தொ. காவின் பலத்தைப் பெருக்கலாம் — என்பது தொண்டமானின் திட்டம் ஆனால் அமைச்சரின் உறவினர்கள் உட்பட இ. தொ. கா. உயர்நிர்வாகிகள் பலர் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இ. தொ. காவில் தமது வருகைக்கு எதிர்ப்பு இருக்கும பட்சத்தில் தமது முன்னணியை அதனுடன் சேர்த்துக் கொள்வதை பிரதி அமைச்சர் சந்திரசேகரனும் விரும்பமாட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தமிழ் மொழிமூல ஆசிரியர் 4,000 பேரை திரட்ட முடிவு

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முனர் நாடு முழுவதும் பத்தாயிரம் புதிய ஆசிரியர்கள் திரட்டப்பட உள்ளனர்.

இவர்களில் 4 ஆயிரம் பேர் தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் ஆவர்.

ஏனையோரில் 4 ஆயிரம் பேர் சிங்கள மொழிமூல ஆசிரியர்களாவர்.

ஆயிரம் ஆசிரியர்கள் பௌத்த மத போதனைக்கும் ஆயிரம் ஆசிரியர்கள் ஏனைய மதங்களைப் போதிப்பதற்கும் திரட்டப்பட உள்ளனர்.

## படையினர் கெடுபிடி அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன. 17

தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாக வடபகுதிப் பயணிகள் புற்பாய்கள், பிளாஸ்ரிக் பாய்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், பிஸ்கட் வகைகள் எவர்சில்வர் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துவர இராணுவத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பொருள்களை எடுத்து வரப் பயன்படுத்தப்படும் சொப்பிங் பைகளும் கிழித்து எறியப்படுகின்றன.

பெரிய ரோர்ச் பற்றரிகளும் எடுத்து வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 3 தீப்பெட்டிகள் 4 சவர்க்காரம் 2 கற்பூர வில்லைகள் குறித்தளவு மருந்துப் பொருள்கள் ஆகியவை எடுத்து வர அனுமதிக்கப் படுகின்றன.

(இ- 76)

## அரசின் வெண்தாமரை இயக்கத்துக்கு தமிழ் கட்சிகளின் ஆதரவு பெறமுயற்சி

கொழும்பு, ஜன. 17

வெண்தாமரை இயக்கத்துக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக பத்து தமிழ் அரசியல் கட்சிகளை தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர கடந்த சனி அன்று சந்தித்தார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள கிராமோதய சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வெண்தாமரை இயக்கத்தின் இரண்டாவது கட்டமாக அதனை தமிழர் மத்தியில் எடுத்துச் செல்வது என்றும்—

இதற்கு வசதியாக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் இந்த சந்திப்பின்போது மங்கள சமரவீர கேட்டுக்கொண்டார்.

வெண்தாமரை இயக்கத்தை தமிழ் மக்களிடம் எடுத்துச் செல்ல முன்னர், அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தனது யோசனைகளை வெளியிட வேண்டும் என்று அப்போது தமிழ்க் கட்சிகள் அமைச்சரைக் கேட்டுக்கொண்டன.

எனினும் குழு அமைக்கும் அமைச்சர் விடுத்த கோரிக்கையை அவை ஏற்றுக் கொண்டது போல் தெரியவில்லை என்று கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைத் தமக்கு செய்து தரும்படி இந்த சந்திப்பின் போது தமிழ்க்கட்சிகள் அமைச்சர் மங்கள சமரவீராவைக் கேட்டுக்கொண்டன.

வெண்தாமரை இயக்கம் பொங்கல் அன்று வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்படவிருந்தது (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்குக்கு வெளியே

# இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர் நிலை என்ன?

## இன்னும் முடிவு இல்லையாம்

கொழும்பு, ஜன. 17

யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வடக்கு- கிழக்குக்கு வெளியே வாழும் அரசாங்க ஆசிரியர்களுக்கு அவர்கள் தங்கும் பகுதிகளில் பாடசாலைகளில் தற்காலிக நியமனம் வழங்குவதா? அல்லது இல்லையா? என்பது பற்றி இன்னும் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான மேற்கண்டவாறு தெரிவித்தார், (இ-3)

## இலட்சார்ச்சனை

சாவகச்சேரி, ஜன. 17

தமிழீழ மக்களின் இன்னல் நீங்கி அமைதி பெற கரவெட்டி கிழக்கு ஸ்ரீ பத்திரகாளிகோவிலில் நாளை முதல் இரு நாள்கள் இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது.

20 திகதி சனிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும். (இ-3)

## வீடு அமைக்க தடி, கப்புகள்

வன்னி பெருநிலப்பரப்பிற்கு குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு வீடு அமைப்பதற்கான தடி, கப்புகள் குறைந்த விலையில் சகல மரமடுவங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

குறைந்த விலையில் இம் மரங்களை பெறுவதற்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அல்லது கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் போதுமானது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

# இடம்பெயர்ந்தோர் முகாமில் வயிற்றோட்டம்

கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய இடம்பெயர்ந்தோர் முகாமில் குழந்தை ஒன்று வயிற்றோட்டம், காய்ச்சல் காரணமாக மரணமானது.

அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சண்முகராஜா செலன்ராஜா என்ற ஒரு வயதுக் குழந்தையே மரணமான குழந்தையாகும்.

இதேபோன்று அக்கராயன் கனகாம்பிகைக் குளம் பாடசாலை முகாம்களிலும் சிலர் வயிற்றோட்டம் காரணமாக மரணமடைந்துள்ளர். (இ-76)

## திறப்பு விழா

சாவகச்சேரி, ஜன. 17

நோயாளர் நலன்புரிச் சங்கம் பளை சுற்றயல் மருத்துவமனையில், நாளை வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு பணிமனை, உணவகம், பல்பொருள் விற்பனை அகம் ஆகியவற்றை திறந்து வைக்கவுள்ளது (இ-3)

## எம். பி. வீட்டுக்கு குண்டு வீச்சு

கொழும்பு, ஜன. 17

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைராஜசிங்கத்தின் வீட்டுக்கு குண்டு வீசப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சு இடம் பெற்ற சமயம் துரைராஜசிங்கம் கொழும்பில் இருந்தாராம்.

# யாழ். இந்து அதிபர் நியமனம் குறித்து அறிவிப்பு

யாழ்.இந்துக்கல்லூரி அதிபராக திரு. இ. மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனுக்கு அறிவித்துள்ளார்,

கடந்த 8ஆம் திகதி முதல் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

திரு, இ. மகேந்திரன் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொது கணக்காய்வாளர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட செ சுப்பிரமணியம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமனாதன் (நில அளவையாளர்), செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், ஜானகி (Nedro), தேவஆனந் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-1-96 நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சு.தேவஆனந் (சங்கர்)
(மகன்)

தற்போதைய முகாவரி:
60 டச்சு றோட்,
சாவகச்சேரி.

399 70

முகாம்களில் உள்ளோருக்கு

# சமைத்த உணவு வழங்குவதற்கு அனுமதி கோருகிறார் அரச அதிபர்

சாவகச்சேரி, ஜன. 17

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு அனுமதி அளிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் இப்போதைய நிலைமையை விளக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

233 நலனோம்பு நிலையங்களில் மொத்தம் 11ஆயிரத்து 119 இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியுள்ளன —

நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் எவ்வித வசதியும் இல்லாத, ஏழைகளிலும் ஏழைகள் ஆவர். இவர்கள், தங்குவதற்கு எந்த இடமும் இல்லை; இவர்களுக்கு எவ்வித வருமானமும் இல்லை.—

இவர்களுக்கு நாம் வழங்கிய உலர் உணவுப் பொருள்களைக் கொண்டு சமைத்த உணவு வழங்குமாறு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியத்தை ஊக்குவித்திருந்தோம்.

ஏனைய தொண்டர் நிறுவனங்களிடம் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், ஒன்றியம் இந்தப் பணியை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்திருந்தது.

கடந்த நவம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்ட சமைத்த உணவு இம்மாதம் 10 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டது.

இதனால் இடம்பெயர்ந்தோர் நலனோம்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக உள்ள எனது கிராம சேவையாளர்களும், பிரதேச செயலர்களும், நானும் இந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்க முடியாது கஷ்டப்படுகிறோம்.

இவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க வீதப் பிரகாரம் சமைத்த உணவு வழங்க அனுமதி தருமாறு கேட்டுக் சொள்கிறேன்— என்று அரச அதிபர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பிராந்திய சபைகளின் பெயர்கள், எல்லைகள், இடப்பரப்பு என்பன சட்டவரைவுடன் இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது என்று சமர்ப்பிக்கப்பட்ட சட்டவரைவில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும்—

சம்பந்தப்பட்ட அட்டவணை அந்தச் சட்ட வரைவுடன் இணைக்கப்படவில்லை. அந்த அட்டவணை குறித்து ஆராய்ந்து அதனைத் தயாரித்து இறுதியாக்கும் பொறுப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் அடுத்த மாதம் மீண்டும் கூடும்போது இந்த சட்டவரைவு நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் சமர்ப்பிக்கப்படும். (உ-இ-6)

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் ஈகைச்சுடர் ஏற்ற அந்நினைவுக் கல்லுக்கு கிட்டுவின் சகோதரர் திரு. சதா. காந்திதாசன் மாலை அணிவித்தார். கிட்டுவின் மனைவியார் கிட்டுவின் உருவப்படத்துக்கு மலர்மாலை சூட்டினார்.

இதனைத் தொடர்ந்து ஏனைய வேங்கைகளின் உருவப்படங்களுக்கு அவர்களின் உறவினர்களும், போராளிகளும் மாலை சூடினார்கள் இதனையடுத்து மக்கள் போராளிகளின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இறுதியாக கடற் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் நினைவுரை நிகழ்த்தினார்.

சாவகச்சேரி

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள நினைவாலயத்தில் நேற்றுக் காலை நினைவஞ்சலி மலரஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு மகளிர் அமைப்பு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி அன்பு தலைமையில் நடைபெற்றது.

(இ-15-173-118-117 31-13)

## மாகாணசபை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.ஏ. என். டி. சில்வா ஆகியோர் இந்த உத்தரவை விடுத்தனர்.

மேற்படி சர்ச்சைக்குரிய தான மாகாணசபை கலைப்பு விவகாரம் அரசமைப்பு சட்டத்துக்கு வியாக்கியானம் செய்வதுடன் சம்பந்தப்படுவதாக அமைவதால் அவ்வாறு செய்யும் அதிகாரத்தைக் கொண்ட உயர் நீதிமன்றத்திடம் இந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் பாரதீனப்படுத்தியிருக்கின்றது.

அரசமைப்புக்கு வியாக்கியானம் செய்யும் வியாபாரம் என்பதால் இந்த விவகாரம் மனு தாக்கல் செய்யப்பட்டு இரு மாதங்களுக்குள் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கலைக்கப்பட் இரு மாகாண சபைகளின் தேர்தல்களுக்குமான நியமனப் பத்திரங்கள் நாளை முதல் 21 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவை அடுத்து நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொளளும் நடவடிக்கையும் இடைநிறுத்தப்படும் என எதிர்பார்க்காப்படுகிறது. [உ-3-6)

## தீர்வு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் நிலையில் இருக்கும் போது தீர்வுத்திட்ட யோசனைகளைப் பரிசீலிப்பதோ, அதனை ஏற்றுக்கொள்வதோ முடியாத காரியம் என்றார் குமார் பொன்னம்பலம்.

### கூட்டணியினர் கருத்து

''இன்றைய சந்தர்ப்பத்தில் கடுமையாக சில விடயங்களை வற்புறுத்திக் கேட்டால் இன்னும் காலதாமதமாகிப் போய்விடும். இந்த தீர்வில் பயன் கிடைக்காமல் போய்விடும். ஆகவே இந்த திட்டத்தை ஏற்கலாம் என்பதே எமது கருத்தாகும்.''—என்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கோ, ஆளுநருக்கோ அறவே இருக்கக் கூடாது என்று நாம் அரசிடமும், ஜனாதிபதியிடமும் வற்புறுத்தி வந்தோம்.

ஆரம்ப நகல் யோசனையில் இந்த அதிகாரத்தை நீக்குவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

தீவிரவாத. வற்புறுத்தலால் ஜனாதிபதி பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் சிறு மாற்றத்துடன் வருகிறது. இதை நாம் இச்சந்தர்ப்பத்தில் ஏற்பது நல்லது என்றே கருதுகிறேன். — என்று மேலும் அவர் கூறினார்.

சட்ட வரைவு குறித்து கூட்டணி எம். பியான நீலன் திருசெல்வமும் வரவேற்று கருத்துக் கூறியுள்ளார்.

## அத்வானி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தி பொதுத் தேர்தலுக்கு முன்பாக வழக்கை முடிப்பதற்கு வசதியாக பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி நேற்று தமது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்தார்.




இன்று முதல் உங்கள் சேவையில்

யாழ் சைனீஸ் உணவகம்

YARL CHINESE

கண்டி வீதி, சாவகச்சேரி.
(சாவகச்சேரி உதவி அரச அதிபர் காரியாலயம் முன்பாக)

★ பிறைட் ரைஸ் (Fried Rice) ★ புரியாணி ★ நூடில்ஸ் ★ ரோல்ஸ் ★ கட்லட் ★ சான்விச் ரோஸ்டர்

போன்ற தரமான உணவு வகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்

மேலதிக தேவைகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

நிர்வாகம்
யாழ் சைனீஸ் உணவகம்

(39969)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 17-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org